# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1952/20 - 2016 පෙබරවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2016.02.02

*1952/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

திருத்தம்

**இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை தினத்தையுடைய 1877/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் அரசாங்க அறிவித்தலின் கீழ் மேற்குறிப்பிட்ட தலைப்பினால் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் திருத்தங்கள் சேர்க்கப்படுவதோடு, அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் எவ்வித மாற்றங்களுக்கும் உட்படாது.

1. பக்க இலக்கம் 2 A இல், 5.3 அட்டவணைக்கு கீழால் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பில் சம்பளப்படிகள் 6 ஆக திருத்தம் செய்யப்படல் வேண்டும். அதற்கிணங்க அக்குறிப்பு கீழ்வருமாறு அமைதல் வேண்டும் :-

   இலங்கை கட்டடக்கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பூரண தொழிற்றகைமை (பட்டயக் கட்டடக்கலைஞர் நிலைமை) அல்லது ஆட்சேர்ப்பின் பின்னர் அந்நிலைமையினை பெற்றுக் கொள்ளுமிடத்து அவ்வலுவலகர் சேவையின் அத்தரத்தின் 6 ஆவது சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவார். இருப்பினும் அவ்வலுவலர் சேவையில் இணைக்கப்பட்டு 3 வருடங்களிற்குள் முதலாவது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2. பக்க இலக்கம் 3 A இல், 7.2.2.1 இன் கீழ் கல்வித் தகைமைகளாக குறிப்பிட்ட பிரிவு அகற்றப்பட்டு கீழ்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

   (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஐந்து (5) வருடங்களைக் கொண்ட கட்டடக்கலைஞர் பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

   அல்லது

   (ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று (3) வருடங்களைக் கொண்ட சுற்றுச்சூழலியல் (Built Environment) பட்டத்துடன் குறித்த துறையில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் ;

   அல்லது

(iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று (3) வருடங்களைக் கொண்ட சுற்றுச்சூழலியல் பட்டத்துடன் குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

3. பக்க இலக்கம் 5 A இல், 7.3.2.3 இன் III ஆம் விடயம் அகற்றப்படுதல்.

4. பக்க இலக்கம் 7 A இல், 10.2.1 இன் V ஆம் விடயம் அகற்றப்படுதல்.

5. பக்க இலக்கம் 10 A இல், 18 ஆம் பிரிவு கீழ்க் காணப்படும் வகையில் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு புறம்பான விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

6. பக்க இலக்கம் 10 A இல், 19 ஆம் இலக்கத்தின் கீழ் ஓய்வு பெறச் செய்தலில் மாற்றீடாக கீழ்வரும் பிரிவு உள்ளடக்கப்படல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட திகதியளவில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் விருப்புக்குரிய ஓய்வூதியம் பெறும் வயதினை அடையாத அலுவலருக்கு அவரினால் கோரிக்கைக்கு ஏற்ப ஓய்வூதிய சம்பள பிரமாணக் குறிப்பின் 7 ஆவது பிரிவின் கீழ் சேவையில் இருந்து ஓய்வுபெறும் விருப்பத்தினை தெரிவிக்கும் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அவ்வாறான சலுகையினை வழங்க வேண்டும் என்றளவிற்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பு ஏற்பாடுகளில் பாதகமான தாக்கம் அவ்வலுவலருக்கு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு திருப்தி அடையும் எனின், குறித்த திகதி முதல் 5 வருடங்களினுள் அவ்வலுவலருக்கு அவ்விருப்பத்தினை தெரிவிக்க முடியும்.

7. பக்க இலக்கம் 10 A இல், 19 ஆம் இலக்கத்தின் கீழ் "ஏனைய" என்பது, இலக்கம் 20 ஆக திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. தடல்லகே,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2016, சனவரி 26.

2- 499

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.